சார்பு நீதிமன்றம், குளித்தலை

O.S.No.

I.A.No.

MCOP.NO.98/2014

I.A.No.

HMOP.NO.

வாதி / பிரதிவாதி ம.சா.8 வது சாட்சி உதவியாளர் திரு.சுப்பிரமணியன் அவர்களால் 44/1969 பிரிவின்படி 13.12.2019 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :விமல்ராஜ் | கிராமம் | :சிவபுரி |
| த/பெ | :அரசகுமார் | தாலுாக்கா | :சிதம்பரம் |
| மதம் | :இந்து | தொழில் | :கொத்தனார் |
| ஜாதி | :பறையர் | வயது | :33 |

மு.வி.

நான் எம்.சி.பி. 98/2014 மனுவின் மனுதாரர் ஆவேன். மனுதாரர் தரப்பு 8 வது சாட்சியாவேன். எனது தரப்பு முதல் விசாரணையை பிரமாண பத்திரமாக தாக்கல் செய்கிறேன்

கு.வி.

நான் விபத்து சமயத்தில் எங்கள் ஊரிலிருந்து சபரிமலைக்கு சென்றோம். டிரைவரை தவிர்த்து நாங்கள் 25 பேர் அடிப்பட்டோம். 25 பேரும் வழக்கு போட்டுள்ளோம். எங்கள் வாகனத்தில் கிளீனர் இல்லை. துணை டிரைவர் இருந்தார். துணை டிரைவர் அடிப்பட்டார். ஆனால் வழக்கு போடவில்லை. 2 டிரைவருடன் சேர்த்து மொத்தம் 27 பேர்கள் பயணம் செய்தோம் என்றால் சரிதான். அதில் 6 பேர் குழந்தைகள். அன்றையதினம் 30 நபர்களுக்கு மேல் பயணம் செய்தோம் என்றால் சரியல்ல. அந்த வாகனத்தில் பயணம் செய்த 14 நபர்களுக்கு தான் சட்ட அனுமதி உண்டு என்றும், அதைவிட அதிகமான ஆட்கள் பயணம் செய்தால் தவறு என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் உட்பட வாகனத்தில் துாங்கிக்கொண்டு சென்றோம் என்றால் சரியல்ல. நான் துாங்கிக்கொண்டு வந்ததால் விபத்து எப்படி நடந்தது என்று தெரியாது என்றால் சரியல்ல. விபத்திற்கு வேன் ஓட்டுனர் காரணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதிகமான ஆட்கள் பயணம் செய்து காப்பீடு ஒப்பந்த மீறல் நடந்துள்ளதால் 2ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கு இழப்பீடு கிடைக்கவேண்டுமென்றால் வாகன உரிமையாளர் தான் கொடுக்கவேண்டுமென்றால் சரியல்ல. எனக்கு எலும்பு முறிவு எதுவும் இல்லை. எனக்கு ஏற்பட்ட

காயம் சொற்ப காயம் என்றும் எனக்கு ஏற்பட்ட காயம் பரிபூரமாண குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு அதிகமானது என்றும், மனு தள்ளுபடியாகவேண்டுமென்றால் சரியல்ல.

ஒம்/விமல்ராஜ்,
ஒம்/C.ஸ்ரீதர்,
சார்பு நீதிபதி,
குளித்தலை.